# கல்வியில் ஆராய்ச்சி (Research in Education)



முனைவர் ப.தினகரன்| Dr. P. DINAKARAN

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, கொங்கு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), ஈரோடு – 638107, அலைபேசி எண் :7010049779, மின்னஞ்சல் :drpdhasini@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

ஆராய்ச்சி என்பது ஓர் இனிமையான அனுபவம். ஆழ்கடலின் அடியில் ஆராய்ச்சிகளை நிகழ்த்துவோரும், இமயத்தின் உச்சியை எட்டியோர் அடையும் இனிய அனுபவத்தினை அடைய இயலும். கேள்விகளின் வழியாக ஆராய்ச்சிகள் மலர்கின்றன. ஆய்வின் விளைவாக அறிவு மலர்கிறது. அறிவின் முதிர்ச்சியாக நாகரீகம் தழைக்கிறது. பண்டைய கற்காலம் முதல் இன்றைய கணிப்பொறிக் காலம் வரை கேள்விகளாலேயே உலகம் முன்னேறி வந்துள்ளது. ஆய்வு என்பது பிரச்சனைக்குத் தீர்வுகாண மேற்கொள்ளப்படும் ஒழுங்குபடுத்தப்பட்ட செயல்பாடு ஆகும். ஆராய்ச்சியின் நோக்கமே அறிவினை விரிவாக்குதல் ஆகும். கல்விமுறையில் கல்விச் செயல்திட்டங்கள் மற்றும் அதனைச் செயல்படுத்தும் அமைப்புகள் அடங்கியுள்ளன. கல்விச் செயல்திட்டங்களைச் செயல்படுத்துவதில் நிறுவன அளவில் ஆசிரியர், மாணவர் மற்றும் கற்பித்தல், கற்றல் செயல்பாடுகளைக் குறிப்பிடலாம். கல்வி ஆராய்ச்சியின் நோக்கங்களைக் கீழ்க்காணுமாறு தொகுத்துக் கூறலாம்.

1. தீர்வு அடைதல்
2. கருத்துக்களை மதிப்பிடல்
3. சிறப்பு அறிவு பெறுதல்
4. முற்கூறல்
5. கோட்பாடுகளைச் சோதித்தல்

கல்வி ஆராய்ச்சியின் வரம்பு அல்லது எல்லை மிகவும் விரிவானது. கல்வியுடன் தொடர்புடைய அனைத்துப் பகுதிகளும் மற்றும் அம்சங்களும் இதில் அடங்கும்.

1. ஆசிரியர் தொடர்பானவை
2. மாணவர் தொடர்பானவை
3. கலைதிட்டம் தொடர்பானவை
4. கல்வி நிலையங்கள் தொடர்பானவை
5. நிர்வாகம் தொடர்பானவை

இவ்வாறாக கல்வியின் ஆராய்ச்சி குறித்தும் சிறப்புக் குறித்தும் அறியலாம்.

## Abstract

Research is a pleasant experience. Those who explore the depths of the ocean and reach the summit of the Himalayas can enjoy the off experience. Research flourishes through questions. Knowledge blossoms as a result of research. Civilization flourishes as knowledge matures. The world has advanced with questions from the Stone Age to the computer age today. Research is a

systematic study that is carried out to solve a problem. The purpose of research is to broaden knowledge. The education system includes educational programs and the organizations that implement them. Teacher, student and teaching and learning activities can be specified at the organizational level in the implementation of educational action plans. The objectives of academic research can be summarized as follows.

1. Achieving the solution
2. Evaluation of suggestions
3. Gaining specialized knowledge
4. Forecast
5. Testing the principles

The scope of academic research is very broad. This includes all areas and features related to education

1. Teacher oriented
2. Student Oriented
3. Project Oriented
4. Educational institutions Oriented
5. Administration oriented

In this way one can learn about the research and specialization of education.

**திறவுச் சொற்கள்** (Keywords) :- கல்வி, Education, ஆராய்ச்சி, Research, ஆய்வுச் சிக்கல், Problem in Research

"பண்டைய கற்காலம் முதல் இன்றைய கணிப்பொறி காலம் வரை கேள்விகளாலேயே உலகம் முன்னேறி வந்துள்ளது. ஆய்வும், அறிவும் இத்தகைய கேள்விகளாலேயே மலர்கின்றன ,வளர்கின்றன.' பூமியை ஏன் சுற்றுகிறது? என்பதை அறிய முற்பட்டவர் தத்துவ அறிஞர் ஆயினர்.' பூமி எப்படிச் சுற்றுகிறது 'என்பதைக் காண முற்பட்டவர் அறிவியல் அறிஞர் ஆயினர். கல்வியியல் ஆய்வானது மனிதர்களுடைய அறிவை வளர்ப்பதற்கும், பெருக்குவதற்கும் மற்றும் பதப்படுத்துவதற்கும் பயன்படுகிறது. சமூக மேம்பாட்டிற்குக் கல்வியியல் ஆய்வு அதிக அளவு பயன்படுகிறது" 1 என்கிறார்.

எந்த ஒரு துறையிலும் பிரச்சனைகள் உள்ளவரை ஆய்வின் தேவையும் தவிர்க்க முடியாததாகும் கல்வித்துறையிலும் பிரச்சினையில் இல்லை அல்லது தீர்ந்து விட்டன என்று எந்த காலகட்டத்திலும் கூற முடியாது ஒரு பிரச்சினையை தீர்க்க புதியதொரு பிரச்சனை முளை தெரிவது இயல்பு. அதற்குத் தீர்வு காண வேண்டியதும் அவசியம் கடலில் அலை ஓய்வதில்லை கல்வித் துறையில் மட்டுமன்றி அனைத்துத் துறைகளிலும் பிரச்சனை முடிவு பெறப்போவதில்லை பிரச்சனை உள்ளவரை ஆராய்ச்சிக்கான தேவை இருந்து கொண்டே தான் இருக்கும் ஏனெனில் ஆராய்ச்சியின் முக்கிய நோக்கம் பிரச்சனைக்கு தீர்வு காணல் ஆகும்

### கல்வி என்பதன் பொருள்

கல்வி என்பது குறித்த விளக்கங்களும், விவரங்களும் பலப்பல. கல்வி என்றால் என்ன என்பது எல்லோருக்கும் புரியவே செய்கிறது என்றாலும், எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு வரையறையாக, இது தான் அது எனச் சுருக்கமாகக்கூறுவது எளிதல்ல. எது கல்வி? என்ற கேள்விக்கான பதிலும் வரையறையும், தத்துவங்களும் நோக்கங்களும், காலம், இடம், சூழலுக்கு ஏற்ப இடத்திற்கு இடம் ,சந்தர்ப்பத்திற்குச் சந்தர்ப்பம், நாட்டுக்கு நாடு காலத்திற்குக் காலம் தனிமனிதருக்கு மனிதர் மாறுபடும் தன்மை கொண்டது. எனினும் எல்லாக் காலக்கட்டத்திலும், அனைவராலும் கல்வியின் முக்கியத்துவமும் அருமை பெருமைகளும் உணரப்பட்டு, உன்னதமானதோர் இடம் கல்விக்கு அளிக்கப்பட்டு உள்ளமையை வரலாறு எடுத்துக்காட்டுகிறது.

"கல்வி என்ற கருத்து பல்வேறு சூழல்களில் பல பொருள்களில் பயன்படுத்தப்படுகிறது. கல்வி எனும் சொல் வாழ்வியல் நோக்கில் மிகப் பரவலாக ப்பொருள்படும். நம் முன்னோர்களிடம் இருந்து நமக்குக் கிடைத்த தகவல்கள், பட்டறிவு, செயல் திறன்கள், செய்முறைகள், சாதக பாதகக் கூறுகள் முதலியவற்றைப் பயில வரும் மாணவர்களுக்கு அளிக்கும் முயற்சியே கல்வி. இதனை 'முறையான கல்வி' "2 என்று கூறுவர்.

கல்வி என்பது தத்துவத்தின் சக்திவாய்ந்த ஒருபக்கமாகும். கல்வி என்பது இலத்தீன் என்ற சொல்லிலிருந்து பிறந்ததாகும். 'E 'என்றால் உள்ளே இருந்து என்றும்' Duco 'என்றால்' வெளிக்கொணர்தல்' என்றும் பொருள்படும் .எனவே Education என்றால் "உள்ளே இருந்து வெளியே கொண்டு வருவதாகும்". மேலும் Educatum என்பதற்கு 'பயிற்றுவித்தல் 'என்று பொருள்படும். 'Educere' லிருந்து கல்வி எனும் சொல் பிறந்தது என்று கூறுவர் . இதன் பொருள் 'வளர்ப்பது' என்பதாகும் . மேலும் 'Educare' என்ற சொல்லில் இருந்து 'Education' தோன்றியது என்றும் கூறுவர். இதன் பொருள் 'வெளிக்கொணர்வது' என்பதாகும். ஆகவே, கல்வியின் அடிப்படைப் பொருள் குழந்தைகளின் வளர்ச்சிக்கான பயிற்சி முறையாகும்.

கல்வியினால் மனிதன் மனிதனாகிறான். உயிரினங்களில் மனிதனுக்கு மட்டுமே கல்வி அளிக்க முடியும். இதர உயிரினங்களுக்குப்பயிற்சி மட்டுமே அளிக்க முடியும். கல்வியானது தன்னுடைய மதிப்புகளாலும் கொள்கைகளாலும், செயல்முறைகளாலும் மனித வளர்ச்சியினைத் திருத்தி அமைக்கின்றது. மேலும் கல்வியானது வருங்காலச் சமுதாயத்தில் வளர்ச்சியை வடிவமைத்து, எதிர்கால வாழ்வின் குறிக்கோள்களை அடைவதற்கும், நிறைவு கொள்ளச் செய்வதற்கும் முயற்சிக்கின்றது. இவ்வகையில் வெளிப்படும்போது எந்நிலையிலும் தனித்தன்மைக்கு ஊறு ஏற்படாத வண்ணம் பாதுகாத்துக் கவனமாக இருந்து ஒரு முழுமையான வளர்ச்சிக்கு உறுதி அளிக்கின்றது. கல்வியானது அதனுடைய விரிவான கருத்தில் "வாழ்வு முழுமையும் அமைந்த வளர்ச்சி "என்பது ஆகின்றது. மனிதன் இயற்கையுடன் தொடர்பு கொள்ளும் போதெல்லாம் அனுபவங்களைப் பெறுகின்றான். இந்த அனுபவமே அவன் இயற்கையின் தொடர்பாலே சூழல்களில் பெறக்கூடிய கல்வியாகும். இந்த நிலையான தொடர்பானது அவனுடைய நடத்தைகளின் மாற்றங்களை விளைவிக்கின்றது. இந்நிலையில் கல்வியானது நடத்தை மாற்றங்களைக் குறிப்பது என்றாகிறது.

"மனிதனின் உள்ளத்தில் புதைந்து கிடக்கும் ஆற்றல்களை உணரச் செய்வதும் வளர்க்கச் செய்வதும் கல்வியின் செயலாகக் கொள்ளலாம். கல்வி என்ற ஆதாரச் சொல்லான கல்லுதல் என்ற சொல் தோண்டுதல் என்ற பொருளை அளிப்பதாக உள்ளது. எனவே

புதைந்து கிடக்கும் ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து மடைமாற்றம் செய்து திசைதிருப்ப வல்லது கல்வியாகும். மேலும் அத்திறம் முழுமையாக வளரவும் உதவுகின்றது. எனவே இக்கல்வியின் பயனாக ஒருவன் இயைந்த முழுவளர்ச்சியினையும் பெறுகிறான். கல்வியானது இச்செயலையே தன்னுடைய பணியாகக் கொண்டு செயல்படுகின்றது"3 என்கிறார்.

கல்வி மனித வாழ்வை மேம்படுத்துகிறது. கல்வி மனிதச் செயலாகும். கல்வியே மனிதனின் நடைமுறை ஒழுக்கங்களை நெறிப்படுத்துகிறது. கல்வி ஒன்றே மனிதன் மனிதனாக மதிக்கப்படுகிறான். கல்வியே வருங்காலச் சமுதாயத்தை வடிவமைத்துத் தருகின்றது. எதிர்கால வாழ்வை குறிக்கோளை அடைவதற்கு உறுதுணை செய்கிறது.

## ஆராய்ச்சி : பொருள் மற்றும் விளக்கம்

ஆய்வு என்பது பிரச்சினைக்கான தீர்வு காண மேற்கொள்ளப்படும் ஒழுங்குப்படுத்தப்பட்ட செயல்பாடு ஆகும். ஆராய்ச்சியின் நோக்கமே "அறிவினை விசாலமாக்குதல்" ஆகும்.

"கிளிபோர்ட் வுட்டி என்னும் கல்வியியலாளர், ஆய்வு என்பது "பிரச்சினையை இனம் கண்டறிந்து, அதற்கான கருதுகோளினை அமைத்து, தேவையான புள்ளிவிவரங்களை சேகரித்து, சேகரித்த புள்ளிவிவரங்களைப் புள்ளியியல் முறையில் பகுப்பாய்வு செய்து பின் முடிவுகளைப் பெறுதல், மற்றும் அந்த முடிவுகளுக்குப் பொருள் சார்ந்த விளக்கமளித்தல் " 4 என்கிறார்.

"ஆராய்ச்சி என்ற சொல் மூன்று கூறுகளை உடையது . ஆர்+ ஆய் + சி என்பன இயைந்து ஆராய்ச்சி ஆயிற்று. ஆர் என்பதற்குக் கூர்மை என்ற பொருளுண்டு. ஆய்தல் என்பதன் பகுதி ஆய் என்பது, ஆய்தல் என்பதற்கு நுணுகுதல், வருந்துதல், அழகாய் இருத்தல், அசைதல், சோதனை செய்தல், பிரித்தல், கருதுதல், தெரிந்தெடுத்தல், கொண்டாடுதல், கொய்தல், காம்பு நீக்குதல், குத்துதல் எனப் பல பொருட்கள் உண்டு என்பர்"5

ஓய்தல், ஆய்தல், நிழத்தல், சாஅய் ஆகிய நான்கு சொற்களும் நுணுக்கம் என்ற பொருள் உடையன.6 குறிஞ்சிப்பாட்டில் வரும் "இருவேம் ஆய்ந்த மன்றல் இதுவென" என்ற அடிக்கு நச்சினார்க்கினியர், நாணமும் மடமும் நுணுகியவழிப் பிறந்த காதல் என்று பொருள் உரைப்பது எண்ணத் தக்கதாகும்.

ஆயுதம் என்ற சொல் தொல்காப்பியர் காலத்திலிருந்து இன்றுவரை வழக்கற்று விடாத சொல்லாகும்.

> ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
> தான்சாம் துயரம் தரும்.7

என்ற இடத்தில் நட்புக் கொள்ளும் முன் ஆராய்ச்சி வேண்டும் என்பர் திருவள்ளுவர். ஆராய்வான் என்ற சொல்லையும் திருவள்ளுவர் பயன்படுத்துகின்றார்.4 ஆராய்பவனை திவாகர நிகண்டு அறிஞன் என குறிக்கின்றது.

## அறிவும் ஆராய்ச்சியும்

அறிவு என்பது எல்லா உயிர்களிடத்தும் வெவ்வேறு படிநிலைகளில் அமைகின்றது. பரிணாம இயற்கை ஓரறிவுயிர் முதலாக ஆறறிவு உயிர் வரை அறிவியலில் ஒரு வளர்ச்சியைக் காட்டுகின்றது. தொல்காப்பியர் அறிதலில் அமைந்த படிநிலைகளை

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றோடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே. 8

என்று கூறுவர். எனவே எல்லா உயிர்களுக்கும் ஒரு வகையாக அறிதல் திறன் உள்ளது. அறிவு என்பது ஐந்து புலன்களாலும் பெறப்படுவது. ஐந்து புலன்களையும் அறிஞர் ஐந்து பேரறிவின் வாயில்கள் என்று குறிப்பர். மழை வரும் என்பதை உணர்ந்து எறும்புகள் உணவு சேகரிக்கின்றன. வெப்பநிலை மாற்றத்தை முன்னரே உணர்ந்து ஈசல்கள் வட்டமிடுகின்றன. நாள்தோறும் திருக்கழுக்குன்றத்தில் உச்சிப் போதில் உணவு ஏற்கக் கழுகுகள் வருகின்றன. வானத்தில் பருந்து பறப்பதை அறிந்து தாய்க்கோழி குஞ்சுகளுக்கு எச்சரிக்கை செய்கின்றது. வௌவால்கள் மரங்களில் பழம் பழுக்கும் காலம் அறிந்து பயன் கொள்கின்றன. பல ஆயிரம் கல் தொலைவில் இருந்து வேடந்தாங்கலுக்குப் பறவைகள் வந்து, பருவம் முடிந்ததும் மீள்கின்றன. வீட்டில் வளர்க்கப்படும் விலங்குகளின் அறிவுத்திறம் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. வளர்த்தவன் சிதையில் எரிவதைக் கண்டு நாயும் நெருப்பில் குதித்து இறந்ததாகச் செய்தி அறிகிறோம். மனிதக் குரங்கு மட்டை பிடித்துப் பந்தாடுகின்றது. ஆனால் இவையெல்லாம் ஆறாவது அறிவின் அடையாளங்கள் இல்லை. தலைமுறைதோறும் வளர்ச்சி பெறுவதாகவும், அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்வதாகவும் அறிவு, பண்பாடு ஆகியவற்றை தலைமுறைக்குக் கற்பிப்பதாகவும் அமைவது ஆறாவது அறிவு. காலம் இடையிட்டவற்றையும் தேயம் இடையிட்டவற்றையும் அறியும் அறிவு என்று இதனை பரிமேலழகர் கூறுவர். இந்த அறிவுத் திறனுக்கு அடிப்படையாக அமைவது மொழியே. நம்மையே நாம் ஆராய்ந்து கொள்ள இந்த அறிவு பயன்படுகிறது.

## ஆராய்ச்சி முறைகள்

ஓர் ஆய்வுக்கு மிகவும் தேவையானது எவ்வகையான ஆய்வு முறையை மேற்கொள்வது என்பதாகும். ஆய்வுப் பொருளுக்கு ஏற்பவும், துறைக்கு ஏற்பவும் ஆய்வு முறை மேற்கொள்ளப் பெறுதலுண்டு. வரலாற்று முறை ஆய்வு, ஒப்பீட்டு முறை ஆய்வு, சோதனை முறை ஆய்வு, உய்த்துணர் முறை ஆய்வு, செலுத்துநிலை ஆய்வு, அமைப்பியல் முறை ஆய்வு, நடைமுறை சார் ஆய்வு ஆகிய ஏழும் அறிவியல் ஆய்வுமுறையின் தொடக்க வடிவங்கள் எனக் கூறலாம். இவை எல்லாமே அறிவியல் ஆய்வுநெறியின் பயனைக் கொண்டு வளர்ந்தன எனக் கூறலாம். அறிவியல் ஆய்வுமுறை என்பது முற்றிலும் அறிவுசார்ந்த முயற்சிகளையும், சோதனைகள் வழி அறியப்பெற்ற மெய்ம்மைகளையும் அடிப்படையாகக் கொண்டது. கற்பனை, அனுமானம், காரணங்கள் புலப்படாத புதிர்நிலை ஆகியவற்றுக்கும் அறிவியல் ஆய்வுமுறைக்கும் இடையே பெரிய இடைவெளி உண்டு. மேற்காட்டிய ஏழு முறைகள் அல்லாத மாதிரி ஆய்வுமுறை, அளந்தறி ஆய்வுமுறை, மதிப்பீட்டு ஆய்வுமுறை, புள்ளிவிவர ஆய்வுமுறை, விளக்கவியல் ஆய்வுமுறை, செயல்முறை ஆய்வுமுறை, மரபியல் ஆய்வுமுறை ஆகியவையும் ஆராய்ச்சியில் பயன்படுத்தப் பெறும். இவற்றிலும் அறிவியல் நெறியின் தாக்கங்கள் உண்டெனினும் முற்குறிப்பிட்ட ஏழு முறைகளைப் போல இவற்றை அறிவியல் ஆய்வு முறையின் தொடக்கநிலை வடிவங்கள் எனக் கூறுவதற்கு இல்லை.

ஆராய்ச்சியின் ஒவ்வொரு படிநிலையிலும் அறிவுக்கும் சோதனைக்கும் மெய்யறிவும் முயற்சிக்கும் இடமுண்டு. வேதியியல் அல்லது இயற்பியல், விலங்கியல், நிலைத்திணை இயல் அல்லது தாவரவியல், வானியல், மண்ணியல், புவியியல் போன்ற அறிவியலின் வெவ்வேறு துறைகளில் மனிதன் சிந்தனையே ஆராய்ச்சியின் அடித்தளமாய் அமைந்தது. ஒரு சிந்தனை, அதன் அடிப்படையில் தோன்றும் ஐயம், ஐயத்தை தீர்த்துக்கொள்ள உசாவல், தேடல், திரட்டி இவ்வாறு இருக்கக் கூடுமோ என்று அரைகுறையாய்த் தெளிந்த நிலை பின் சோதனைகள் நினைத்தது சரியானது சரியான அழியும் நிலை பின் விதிகளை வகுக்கும் நிலை ஆகியவற்றின் அடிப்படையில் ஆராய்ச்சி அளிக்கின்றது. இவ்வாறு பல படிநிலைகளைக் கடந்து செல்வதே ஆராய்ச்சி முறை எனப்படும்.

ஆய்வு முறைகளிலிருந்து உத்திகள் மாறுபட்டவை. உத்தி என்பது ஆராய்ச்சி முறையில் நாம் சமைத்துக் கொள்ளும் கருவியைக் குறிப்பதாகும். நேர்காணல் ஓர் உத்தி. ஆய்வுக்கூட சோதனை ஓர் உத்தி. பட்டியல் அனுப்பிக் கருத்துக்களைப் பெறுதல் ஓர் உத்தி. இவ்வாறு மாறுபட்ட உத்திகளை வெவ்வேறு ஆய்வுகளில் கருவிகளாகப் பயன்படுத்தலாம். ஒரு பொருளைக் குறித்த முறையான படிப்பு முறை எனப்படும். ஒவ்வொரு முறைக்கும் குறிக்கப்பட்ட வரையறை விதிமுறை ஆகியன உண்டு. இந்த முறைகளில் காலப்போக்கில் மாற்றங்கள் நிகழா, ஆனால் உத்திகளில் மாற்றம் இருக்கும். நேர்காணல் என்பது ஒரு காலத்தில் ஆளை நேரில் கொண்டு வினாக்களுக்கு விடைகளை பெறுவதாக இருந்தது. இன்று தொலைபேசி வழியாகக் கேட்டுப் பதிவு செய்து கொள்ளுதலும் நேர்காணல் என்னும் அளவில் மாறுதல் ஏற்பட்டுள்ளது. அறிவியல் துறைகளுக்கு வேறாகவும் சமூகவியல் துறைக்கு வேறாகவும் உத்திகள் அமைகின்றன. இலக்கிய ஆராய்ச்சிக்கு அறிவியல் துறையினர் பயன்படாமல் போகலாம். அறிவியல் துறையில் பயன்படும் ஊடுகதிர் போன்றவற்றைப் பயன்படுத்தும் உத்திகளுக்கு இனமுண்டு. இலக்கிய ஆராய்ச்சிகளில் சிந்தனையின் நோக்கம் துருவித்துருவிப் பகுத்தாராயும் எந்த நூல் கூறும் அமையும் கருவிற்கு இடமில்லை.

ஆய்வேடுகள் என்ன முறை ஆய்வு மேற்கொண்டன என்று கூறுகையில் இந்த ஆய்வேட்டில் விளக்கவியல் ஆய்வு முறையும் ஒப்பீட்டு ஆய்வு முறையும் வரலாற்று ஆய்வு முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன என்று எழுதிவிட்டனர். ஆய்வில் இத்தனை முறைகள் பயன்படுமா என்பது அறிதற்குரியது. "விளக்கவியல் ஆய்வு என்பது நிகழ்கால சூழலை அதன் ஒரு பகுதியில் காணப்பெறும் பொது பண்புக்கூறுகளைப் படி எடுக்கும் வகையில் அணுகி உண்மை காண்பதாகும். இம்முறை இயற்பியல் மற்றும் இயற்கை அறிவியல் துறைகளில் மிகுதியாகப் பயன்படுவது. இம்முறையில் இயற்பியல் அழைக்கிறது. உயிரியல் வகைப்பாடு செய்கிறது. விலங்கியல் பகுதி நிலை இயல்பாகவே சமூக அறிவியலில் இம்முறை பொது நிலைகளில் சமூகப் பொருளாதார அளவிலும் வேலைவாய்ப்பு மற்றும் செயல்களில் பகுப்பாய்வில் பயன்படுகிறது" என்று கூறக் காணலாம். ஓர் ஆய்வில் ஒரு குறிப்பிட்ட முறையே பேரிடம் பெறும்.

### கல்வியில் ஆராய்ச்சியின் நோக்கங்கள்

கல்வி முறையில் கல்விச் செயல்திட்டங்கள் மற்றும் அதனை செயல்படுத்தும் அமைப்புகள் அடங்கியுள்ளன. கல்விச் செயல் திட்டங்களைச் செயல்படுத்துவதில் நிறுவன அளவில் ஆசிரியர், மாணவர் மற்றும் கற்பித்தல், கற்றல் செயல்பாடுகளைக் குறிப்பிடலாம். கீழ்க்காணும் சில நோக்கங்களை நிறைவேற்ற கல்வியில் ஆராய்ச்சி தேவைப்படுகிறது. கல்வி ஆராய்ச்சியின் நோக்கம், கல்வியின் சிறப்புத் தன்மைகளை உள்ளடக்கி அமையும்.

கல்வி ஆராய்ச்சியின் நோக்கங்களாகப் பின்வருவனவற்றைக் கூறலாம். தீர்வு அடைதல், கருத்துக்களை மதிப்பிடல், சிறப்பறிவு பெறுதல், முற்கூறல், கோட்பாடுகளைச் சோதித்தல் என ஆராய்ச்சி சரிபார்க்கப்படுகிறது.

கல்விப் பிரச்சனைகளுக்குத் தீர்வுகள் காண்பது ஆராய்ச்சிகளால் மட்டுமே முடியும். சிக்கலை அறிந்து, காரணங்களை ஆராய்ந்து, விவரங்களைச் சேகரித்து, பகுத்து ஆய்ந்து, சிக்கலுக்குரிய தீர்வை அடைதல் ஆராய்ச்சியின் நோக்கம் ஆகும். தீர்வைத் தராத ஆராய்ச்சி பயனற்றது.

கல்வி உலகின் கருத்துக்களை மதிப்பிடுதல் கல்வி ஆராய்ச்சியின் நோக்கமாகும். மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப கருத்துக்களில் மாற்றம் தேவைப்படும். அவை ஆராய்ச்சி முறைப்படி அணுகி முடிவுகளைக் கூறுகின்றன. பழையன கழிதலும் புதியன புகுத்தலும் எந்த அளவுக்கு ஏற்புடையது என்பதை முடிவு செய்யவும் ஆராய்ச்சி பயன்படுகிறது. முன்பே உள்ள அறிவையும் சேர்த்து புத்தறிவை, சிறப்பு அறிவைத் தர ஆய்வு துணைபுரிகிறது. எனவே சிறப்பு அறிவு பெறுதல் கல்வி ஆராய்ச்சியின் நோக்கமாக அமைகிறது.

கல்வியின் கூறுகளில் ஏதேனும் ஒன்றின் வரலாற்று வளர்ச்சி ஆகியவற்றை ஆராயவும் பயன்படுகிறது. இவற்றின் கடந்தகால, நிகழ்கால விவரங்களின் அடிப்படையில் எதிர்காலம் பற்றிய கல்வி நிலைகளை அறிய முடியும். எனவே எதிர்கால நிலையைக் கணித்து முன்கூட்டியே கூறுதல் கல்வி ஆராய்ச்சியின் நோக்கங்களில் ஒன்றாகிறது. புதிய கோட்பாடுகளை உருவாக்க ஆராய்ச்சி பயன்படுகிறது. கோட்பாடுகளைச் சரிபார்க்கவும் ஆராய்ச்சி பயன்படுகிறது. கோட்பாடுகளின் காரண - காரிய உறவுகளைச் சோதித்து சரிபார்க்க ஆராய்ச்சி தேவைப்படுகிறது. கல்வி ஆராய்ச்சியின் வரம்பு அல்லது எல்லை மிகவும் விரிவானது. கல்வியுடன் தொடர்புடைய அனைத்துப் பகுதிகளும் மற்றும் அம்சங்களும் இதில் அடங்கும். ஆசிரியர் தொடர்பானவை, மாணவர் தொடர்பானவை, கலைத்திட்டம் தொடர்பானவை, கல்வி நிலையங்கள் தொடர்பானவை, நிர்வாகம் தொடர்பானவை என இவை அடங்கும்.

ஆசிரியர் முன்பயிற்சி, பணியிடைப் பயிற்சி, வகுப்பறை மேலாண்மை, கற்பித்தல் திறன்கள், தொழில் புலமை, தொழிலில் நாட்டம், ஆளுமைப் பண்புகள், தலைமையேற்புப் பாணி, கற்பித்தல் முறைகள் மற்றும் யுத்திகள், ஆசிரியர் பிரச்சினைகள் போன்றவை. மாணவர் கற்றல், கற்றல் பாணி, கற்றல் தொடர்பான காரணிகள், உளவியல் பண்புகள், கற்றல் இடர்பாடுகள், கற்றல் அடைவு, கற்றல் நிறைகுறைகள், படிக்கும் பழக்கவழக்கம், ஆசிரியர் மாணவர் உறவு, மாணவர் உறவு போன்றவை. கலைத்திட்ட வடிவமைப்பு, கலைத் திட்டம் செயல்படுத்துதல், கற்பித்தல் மாதிரிகள், கற்பித்தல் உபகரணங்கள், மதிப்பீட்டு முறைகள், உளவியில் சோதனைகள், சோதனைகள் தரப்படுத்துதல், பருவத் திட்டம், பருவம் இல்லா திட்டம், கல்வித் தத்துவங்கள், இயலா நிலையில் உள்ளவர்களுக்கான கல்வித் திட்டங்கள் போன்றவை.

அடிப்படை வசதிகள், நூலகம், ஆய்வகம், விளையாட்டு வசதிகள் இடவசதி, பாதுகாப்பு முறைகள், உடல் நல திட்டங்கள் போன்றவை. தணிக்கை மேற்பார்வையிடல் நிறுவனச் சூழல், தலைமை ஏற்கும் பாணி, ஒழுங்கு, கட்டுப்பாடு, நிதி நிலை விதிமுறைகள், கல்வி அறிக்கைகள், பரிசீலனைகள், கல்வித்திட்டங்கள், விளைவுகள் போன்றவை. கல்வியோடு தொடர்புடைய எந்தப் பகுதியும் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்படலாம் . நாம் தேர்வு

செய்யும் பிரச்சினை பொருத்தமானதாகவும், கல்வி மேம்பாடுகளுக்கு வழிவகுப்பதாகவும் அமைந்திட வேண்டும்.

**கல்வியில் ஆய்வு தேவை**

ஒரு நாட்டின் எதிர்காலம் அந்நாட்டின் நடைமுறையில் உள்ள கல்வி அமைப்பு முறையில் தான் அடங்கியுள்ளது என்பது அசைக்க முடியாத உண்மையாகும். கல்வி முறை சிறப்பாக செயல்படுத்த வேண்டுமெனில் கல்வி செயல்திட்டங்கள் தேவைக்கேற்பவும், காலத்தின் மாறுபாடுகளுக்கு ஏற்பவும் மாற்றியமைக்கப்பட வேண்டும். மாற்றியமைக்கப்படும் செயல்திட்டங்கள் சிறப்பாக நிறுவன அளவில் செயல்படுத்த வேண்டும். கல்விச் செயல்திட்டங்களை வகுப்பதிலும் அவற்றைச் செயல்படுத்துவதில் உள்ள பிரச்சனைகளுக்குக் கல்வி ஆராய்ச்சிகள் மூலம் தீர்வு காண முடியும்.

கல்வித் துறையில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு அறிவியல் முறையில் தீர்வு காணும் செயல் முறையே கல்வி ஆராய்ச்சி எனப்படும். கல்விச் செயல்முறையைச் சிறப்பாக புரிந்து கொள்வதற்காகவும் அதன் திறனை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் முறையான முயற்சியை ஆராய்ச்சி குறிக்கிறது. கல்விப் பிரச்சினைகளை இது அறிவியல் முறையைப் பயன்படுத்தி ஆராய்கிறது. ஆராய்ச்சிக்குரிய இயல்புகளும் படிநிலைகளும் கல்வி ஆராய்ச்சிக்குப் பொருந்தும். இதுபோலவே ஆராய்ச்சியாளர் கூறிய பண்புகளும் கல்வி ஆராய்ச்சி அவருக்கும் பொருந்தும். ஆய்விற்கான தேவை யானது பின்வரும் காரணங்களை கொண்டுள்ளது.

கல்விசார் பிரச்சினைகளுக்குத் தீர்வினை கண்டறிய ஆராய்ச்சி தேவைப்படுகிறது. கண்டறிந்த தீர்வினை அறிவியல் பூர்வமாக சோதித்து அறிய ஆராய்ச்சி தேவைப்படுகிறது. பிரச்சினையின் தீர்வுக்கு பொருள் சார்ந்து விளக்கமளிக்க ஆராய்ச்சி தேவைப்படுகிறது. கல்வித்துறையில் பாடப்பொருள் கற்பித்தல் கற்றல் முறைகள் தேர்வுகள் ஆசிரியர்கள் மாணவர்கள் நிர்வாகம் போன்ற பல உறுப்புகள் உள்ளன. ஒவ்வொன்றிலும் ஏதாவது ஒரு சிக்கல் தோன்றிக் கொண்டேதான் உள்ளது. அவற்றுக்குத் தீர்வு காண்பதற்கு ஆராய்ச்சி தேவைப்படுகிறது.

கற்பித்தலில் பல உத்திகள் அவ்வப்போது தோன்றி வந்துள்ளன. அனைத்தையும் அப்படியே வைத்திருக்கவும் இல்லை. புதியனவற்றைத் தேடவும் இல்லை. காலப்போக்கில் புதிய சூழ்நிலைகளுக்கு ஏற்ப புதிய உத்திகள் கையாளப்பட ஆய்வு தேவைப்படுகிறது. தொழில்நுட்ப வளர்ச்சி துரிதமாக வளர்ந்த வண்ணம் உள்ளது. அவர்களினால் கல்வியின் பல்வேறு கூறுகள் தாக்கம் புரிகின்றன. கற்பித்தல் பொறிகள் போன்றவை ஆசிரியருக்குப் பதிலாக செயல்படும்போது அதன் எல்லையைச் சுட்டிக்காட்டுவது ஆய்வாகத்தான் இருக்கும். தொலைக்காட்சி மூலம் உயர்கல்வி என்பது பற்றி இருவேறு கருத்துக்கள் உள்ளன இதில் எது உண்மை என்பதை அறிய ஆய்வு தேவை.

சமூக அறிவியல்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து செயல்படுகின்றன. கல்வியில் அவைகளின் இசைவைப் பொருத்தித் தர ஆய்வுகள் பயன்படுகின்றன.

கல்வியில் புதிய கோட்பாடுகளை உருவாக்கவும் இருக்கின்ற கோட்பாடுகளின் உண்மையை மாறிய சூழலில் சரிபார்க்கவும் ஆய்வு தேவைப்படுகிறது. சமூகக் குறைபாடுகளை நீக்கி சமூக மாற்றத்தைத் தருவது கல்வி. இத்தகைய கல்வியின் மூலம் சமூக மறுமலர்ச்சியையும்

கல்வியில் சிறப்பு அறிவு பெறவும் கற்றல் சூழலை மேம்படுத்தவும் கற்றலுக்கான வாய்ப்புகளைப் பயன்படுத்தவும் கல்வியில் ஆய்வு தேவைப்படுகிறது.

## ஆராய்ச்சிகளில் பிரச்சனை

கல்வியில் சிறப்பு அறிவு பெறவும், கற்றல் சூழலை மேம்படுத்தவும், கற்றலுக்கான வள வாய்ப்புகளைப் பயன் தரும் விதத்தில் பயன்படுத்தவும் கல்வியில் ஆராய்ச்சி தேவைப்படுகிறது. எந்த ஒரு துறையிலும் பிரச்சனைகள் உள்ளவரை ஆய்வின் தேவையும் தவிர்க்க முடியாதது ஆகும். கல்வித்துறையிலும் பிரச்சினைகள் தீர்ந்து விட்டன என்று எந்த ஒரு காலகட்டத்திலும் கூறமுடியாது. ஒரு பிரச்சினையை தீர்க்க, புதியதொரு பிரச்சனை முளைத்தெழுவது இயல்பு. அதற்குத் தீர்வு காணவேண்டியதும் அவசியம். ஆராய்ச்சியின் முக்கிய நோக்கம் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணல் ஆகும். ஆகவே பிரச்சனைகளைத் தெரிவு செய்வதில் மிகமிக கவனமாக ஆராய்ச்சியாளர் இருத்தல் வேண்டும். ஆராய்ச்சியைத் தொடங்கி முடிப்பதற்குச் செயல்முறைகள் உள்ளன. அவற்றையே ஆய்வு முறை என்கிறோம். கல்வி ஆய்வானது அறிவியல் அணுகுமுறை கொண்டு விளங்குவதால் இதன் செயல்முறைகள் குறிப்பிட்ட சில படிநிலைகளைக் கொண்டு அமைகின்றன. ஆராய்ச்சிக்குரிய பிரச்சனையைத் தேர்ந்தெடுப்பது ஆராய்ச்சி பிரச்சினையை சொற்களால் குறித்தல் கருதுகோள்களை உருவாக்கி இலக்கியங்களை கற்றல் ஆராய்ச்சிக் கருவிகள் மாதிரி கூறுகளை எடுத்தாளல், ஒரு விவரங்களை சேகரித்தல் முடிவுகளும் பொதுமக்களும் ஆகிய படிநிலைகள் காணப்படுகின்றன.

ஆராய்ச்சிக்குரிய பிரச்சினையைத் தேர்ந்தெடுப்பது ஆராய்ச்சியின் முதல் படியாகும். சரியான தலைப்பை எடுத்துக் கொண்டால் ஆராய்ச்சி சிக்கலின்றிச் செல்லும் எனலாம். ஆராய்ச்சித் தலைப்பு புதுமையும் வாழ்க்கைப் பயனும் உடையதும், சார்பிலக்கியம் கொண்டதும், ஆராய்ச்சிக் கருவி பயன்பாடு நிலை உடையதுமாக இருத்தல் சிறப்பு. அத்தகைய நிலையில் ஆராய்ச்சித் தலைப்பு அமைந்திட அதன் தோற்றுவாய்களைப் பொறுமையாக பரிசீலித்தல் அவசியம்.

ஆராய்ச்சித் தலைப்பைத் தெரிவு செய்து விட்டால் மட்டும் போதாது. அதனைத் தக்க சொல் கொண்டு குறிப்பிடவும் வேண்டும். தலைப்பைக் குறிப்பிட பயன்படுத்தும் சொற்கள் எளிமையாகவும் திட்டவட்டமான பொருளை உடையனவாகவும் இருத்தல் வேண்டும். தலைப்பைச் சரியாகக் குறிப்பிட்டு விட்டால் ஆராய்ச்சியின் பாதிச்சுமை இறங்கி விட்டதாகப் பொருள்.

அறிவியல் முறையில் கருதுகோளின் இடம் மிக முக்கியமானது. கருதுகோள் என்பது தீர்வு கருதிய அனுமானம். அனுமானங்கள் எனக் கூறுவதால் பின்னர் அந்த அனுமானத்தைத் தள்ளுபடி செய்யவோ அல்லது ஒத்துக் கொள்ளவோ, தள்ளவோ, கொள்ளவோ செய்ய வாய்ப்புள்ளது என்று பொருள். சில உண்மைகளைக் கண்டறிய சில தற்காலிகமான முடிவுகளை மேற்கொள்ளலாம் .அம் முடிவுகளின் உண்மைநிலை சோதனைக்கு உரியது. சோதனை முடிவுகளின் அடிப்படையில் முன்பு எடுக்கப்பட்ட முடிவுகள் ஒத்துக் கொள்ளவோ, அல்லது தள்ளுபடி செய்யவோ இருக்கலாம். இக்கருதுகோள் ஆய்வை நேர் வழியில் இட்டுச் செல்ல துணைபுரியும் எனலாம். தற்போது ஆய்வு என்பதே கருதுகோளைச் சோதிப்பது தான் என்று அர்த்தம். கருதுகோளை உருவாக்கும் போது தகுந்த கவனம் தேவை. எதை வேண்டுமானாலும் ஊகித்துக் கொள்ளல் என்பது தவறு. நூல்கள், கட்டுரைகள், ஆராய்ச்சிவுரைகள் போன்றவற்றை ஆழ்ந்து படிப்பதன் மூலமே ஒன்றின் விளைவுக்குரிய

காரணிகள் எவை? என்று அறிய முடியும் .அந்த அடிப்படையில்தான் கருதுகோளை அமைக்க முடியும்.

ஆராய்ச்சிக்கு நேர்முக மறைமுக தொடர்புடைய அனைத்து அடிப்படைக் கூறுகளையும், ஆதாரங்களையும் தருகின்ற ஆய்வுரைகள், ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள், இதழ்கள் போன்ற அனைததும் சார்பிலக்கியங்கள் எனப்படும். வளர்ச்சி பெற்று வந்துள்ள அறிவே வரவிருக்கும் புதுமை வெளிப்பாட்டிற்கு உதவும். அதற்கு ஏற்ப ஆராய்ச்சியை மேற்கொள்ளும் ஒருவர் இதுவரை அத்துறையில் செய்யப்பட்டுள்ள ஆராய்ச்சி வளர்ச்சியை அறிய வேண்டும். அதற்கு சார்பு இலக்கியங்களைக் கற்க வேண்டும் என்பது ஆராய்ச்சி முறையில் ஒரு முக்கிய படிநிலை ஆகும்.

ஆராய்ச்சி முறையையும் ஆராய்ச்சிக் கருவிகளையும் திட்டமிடல் அடுத்த முக்கிய படிநிலை ஆகும். ஆராய்ச்சிக்குரிய விவரங்களை எப்படி சேகரிப்பது எத்தகைய ஆராய்ச்சிக் கருவிகளைப் பயன்படுத்துவது என்பவற்றை முன்கூட்டியே திட்டமிட வேண்டும். மாதிரிக் கூறுகளைச் சமவாய்ப்புக் கூறு எடுத்தல் முறையில் தேர்வு செய்வதால் ஆராய்ச்சி முடிவுகள் நம்பகம் பெறும். கூறுகளின் எண்ணிக்கை மிகக் குறைந்தோ கூடியோ இருத்தல் கூடாது. காலம், செலவு விவரங்களைப் பெறுவதில் ஒத்துழைப்பு, ஆய்வு பரப்பு, ஆராய்ச்சித் தலைப்பின் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் மாதிரிக் கூறுகளை முடிவு செய்ய வேண்டும்.

புள்ளி விவரங்களே ஆராய்ச்சிக்கு அடிப்படை. விவரங்கள் முதல் நிலை விவரங்கள், இரண்டாம் நிலை விவரங்கள் என இருவகைப்படும். முதல்நிலை விவரங்கள் நேரடியாக ஆராய்ச்சியாளர் சேகரிப்பது. இரண்டாம் நிலை விவரங்கள் தயார் நிலையில் வெளியீடுகள், செய்தித்தாள்கள், கோப்புகள் போன்றவற்றிலிருந்து கிடைப்பவை. ஆராய்ச்சிக்கு எது தேவை என்பதைத் தீர்மானித்து அதன்படி சேகரிக்க வேண்டும். சேகரிக்கப்பட்ட விவரங்கள் மூலப் பொருளுக்குச் சமமானவை. அவற்றை வகைப்படுத்தி, ஒழுங்குபடுத்தி, பிரித்து எழுதி அட்டவணை வடிவில் அமைக்க வேண்டும். அதன்பின் தக்க ஆராய்ச்சிக் கருவிகளைப் பயன்படுத்தி பகுத்து ஆய்வு செய்தல் வேண்டும். புள்ளியியல் முறைகளும் கணிப்பொறிகளும் இதற்குப் பயன்படும். பகுப்பாய்வில் இருந்து கிடைத்த முடிவுகளைப் பொருள் வடிவாக்குதல் இப்படி நிலையில் இறுதி கட்டமாகும் . எடுத்துக்காட்டாக, ஒரு வகுப்பு மாணவர்கள் இரு பாடங்கள் (தமிழிலும், அறிவியலிலும்) எடுத்த மதிப்பெண்களின் தர உறவுக் கெழு r-0.80 என வந்தால் அதை மட்டும் அப்படியே குறிப்பிட்டால் போதாது. அதிலிருந்து அறியப்படும் கருத்தை வாக்கியத்தில் அமைத்து தர வேண்டும்.

கிடைத்த முடிவுகளின் அடிப்படையில் கருதுகோள்களை ஏற்றுக்கொள்ளுதலும், நிராகரித்தலும் ஆய்வு முறையின் இறுதிப் படிநிலை எனலாம். கொள்ளப்படும் கருதுகோள் பொதுமை ஆகிறது. மாதிரிக் கூறுகளை ஆராய்ந்ததில் இருந்து கிடைத்த உண்மைகளைக் கொண்டு பொது விதிகளை அமைத்தல் வேண்டும். அதுவே பொதுமைகளை உருவாக்குதல் எனப்படும்.

### கல்வி ஆராய்ச்சிக்கான அணுகுமுறை

தடங்களை உணர்தல், பிரச்சினையை இனம்கண்டு வரையறுத்தல், கருதுகோள்கள், கருதுகோள் வழி ஏற்படும் பின்விளைவுகளை ஊகித்தல், கருதுகோள்களைப் பரிசோதித்து சரிபார்த்தல், எனப் பின்வரும் ஆராய்ச்சியின் அணுகுமுறைகள் உள்ளன. சில தடங்கள், அனுபவங்கள், புரிந்துகொள்ள இயலாத புதிர்கள் ஆகியவற்றை ஓர் ஆராய்ச்சியாளர்

எதிர்நோக்கக் கூடும். அப்போது அவர் விரும்புகிற முடிவை நிறைவேற்றிக் கொள்ளும் வழிவகை அற்றவராகவோ, அல்லது பொருளின் இயல்பை அடையாளம் காண்பதில் இன்னல்களை உணர்பவர் ஆகவோ, ஒரு எதிர்பாராத நிகழ்ச்சியை விளக்க முடியாதவராகவோ இருக்கலாம். இந்த இன்னலைக் கண்டுகொண்டு விலகி அதை சிக்கல் கூற்றாக வடிவமைக்க வேண்டும். இதற்காக அவர் சிக்கல்களைக் கூர்ந்து கவனித்து விவரங்கள் திரட்டி, எதிர்கொண்ட இன்னலை விளக்கி தமது ஆராய்ச்சித் தலைப்பைத் தெளிவுபெறப் பகிர்ந்துகொள்கிறார்

அவர் எதிர்கொண்ட சிக்கலை நுண் அறிவோடு கூடி ஊகங்களோடு தீர்வு காண்பதற்கான கருத்துக்களை கூறுகிறார். இதற்கான காரணங்கள் பற்றி ஊகங்கள் கருதுகோள்கள் எனப்படும் இவ்வாறு உருவாக்கப்பட்ட கருதுகோள் பகுத்தறிதல் சிந்தனை சார்ந்தவை. ஒரு கருதுகோள் உண்மையானால் ஒரு குறிப்பிட்ட விளைவு பின்விளைவாக இருக்கும். எடுத்துக்காட்டாக பள்ளிக்கு வருகை குறைவு மாணவர்களின் தேர்ச்சியைக் குறைக்கும்.

ஒவ்வொரு கருதுகோளையும், பரிசோதனை முறையில் சரிபார்க்க ஏற்றவாறு உற்றுநோக்கல்களைக் கையாண்டு கருதுகோள்களைச் சோதிக்க முடியும். அதாவது உற்றுநோக்கிப் பெற்ற தகவல்கள் மூலம் கிடைத்த ஆதாரங்களோடு எந்த அளவு விளைவு பொருந்துவனவாக உள்ளன என்பதை அறிய முடியும். வலுவான ஏற்ற ஆதாரங்களின் அடிப்படையில்தான் கருதுகோள்கள் இயக்கப்படுகின்றன அல்லது ஒதுக்கப்படுகின்றன.

### சிறந்த ஆராய்ச்சியாளர் குணநலன்கள்

ஆய்விற்கான நோக்கமானது தெளிவாக வரையறுக்கப்பட்டு இருக்கவேண்டும். ஆய்வின் முறையானது தெளிவாக வரையறுக்கப்பட்டு இருக்கவேண்டும். ஆய்வினை மேற்கொள்ளும் முறை தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் ஒரு காலத்தில் இதே பகுதியில் ஆய்வினை மேற்கொள்பவர்களுக்கு இது பேருதவியாக அமையும். ஆய்விற்கான புள்ளிவிவரங்கள் சரியாகவும், உண்மையாகவும் சேகரிக்கப்பட்டு இருக்க வேண்டும். புள்ளிவிவரங்களைப் பகுப்பாய்வு செய்யும்போது, அதில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். பகுப்பாய்வில் தேவையான புள்ளியியல் விவரங்களைப் பயன்படுத்த வேண்டும். ஆய்வில் ஏற்படைமை மற்றும் நம்பகத்தன்மை சரியான விதத்தில் அமையும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். ஆய்விற்கான முடிவானது, உண்மையாகவும் பொருள் சார்ந்தும் அமையும்படி இருத்தல் மிகவும் அவசியமாகும்.

### சிறந்த ஆராய்ச்சியின் தகுதிகள்

சிறந்த ஆய்வானது முறைப்படுத்தப்பட்டது. சிறந்த ஆய்வானது தர்க்கரீதியானது. சிறந்த ஆய்வானது உண்மைகளை அடிப்படையாகக் கொண்டது. சிறந்த ஆய்வானது மதிப்பீட்டிற்கும் கருத்தொற்றுமைக்கும் உட்பட்டது.

கீழ்க்கண்ட பண்புகளை ஆராய்ச்சியாளர்கள் பெற்று இருத்தல் மிகவும் அவசியம். அறிவியல் மனப்பான்மையைப் பெற்றிருத்தல், எச்சரிக்கை, கற்பனை வளம் மற்றும் நன்கு புரிந்து கொள்ளும் தன்மையைப் பெற்றிருத்தல், உண்மையைத் தேடும் விருப்பம் கொண்டவராக இருத்தல். சீக்கிரம் புரிந்து கொள்ளும் தன்மையைக் கொண்டிருத்தல். பொறுமையும், சேகரித்த செய்திகளை மனதில் நிறுத்திக் கொள்ளும் திறமையை பெற்றிருத்தல் வேண்டும். மேற்கூறிய பண்புகளை ஆராய்ச்சியாளர்கள் பெற்றிருந்தால் தான் ஆராய்ச்சியை நல்ல முறையில் சிறப்பாக மற்றும் சமுதாயத்திற்குப் பயன்படும் வகையில் நடத்த முடியும்.

## சான்றெண் விளக்கம்


1. மீனாட்சி சுந்தரம்.அ (2010) கல்வியில் ஆராய்ச்சி, காவ்யமாலா பப்ளிஷர்ஸ், திண்டுக்கல். ப.1
2. மீனாட்சி சுந்தரம்.அ (2010) கல்வியில் தத்துவமும் சமுதாயமும், காவ்யமாலா பப்ளிஷர்ஸ், திண்டுக்கல். ப.5
3. மீனாட்சி சுந்தரம்.அ (2010) கல்வியில் தத்துவமும் சமுதாயமும், காவ்யமாலா பப்ளிஷர்ஸ், திண்டுக்கல். ப.7
4. மீனாட்சி சுந்தரம்.அ (2010) கல்வியில் ஆராய்ச்சி, காவியமாலா பப்ளிஷர்ஸ், திண்டுக்கல், ப.2
5. சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி 1 : ப.236.
6. பேராசிரியர், தொல்காப்பியம் ,சொல்லதிகாரம், .330.
7. மு.வ , திருக்குறள் உரை, 792.
8. பேராசிரியர்,தொல்காப்பியம், பொருளதிகாரம், 582.


******************

# அகநானூற்றில் தலைவனின் பரத்தமை ஒழுக்கம் - உளவியல் நோக்கும் தீர்வும் Agananootril Thalaivanin Parathamai Ozhukkam – Ulaviyal Nokum Thirvum




## ரா. வனிதா | R. Vanitha

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அரசுக்கல்லூரி, மூணாறு - 658612. கேரளா
vanitharoni@gmail.com, 9092391122



### ஆய்வுச்சுருக்கம்

**“இனிமையும் நீர்மையும் தமிழெனலாகும்”** – (பிங்கல நிகண்டு, பாகம்-4, சூத்திரம் 3610)

என்று புகழப்படும் தமிழ்மொழிக்குப் பெருமை சேர்ப்பது தமிழர்களின் படைப்பேயாகும். அதிலும், தமிழெனப்படுவது சங்கத்தமிழே (சங்க இலக்கியம்) என்பது தமிழ் மந்திரம். இச்சங்கத்தமிழானது (சங்க இலக்கியம்) இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மக்கள் வாழ்வையும் மனப்பண்புகளையும் நோக்கியதாக அமைக்கப்பட்ட ஒரு பெருங்கடல் எனலாம். உளவியல் என்பது அண்மையில் தோன்றிய ஒரு புதுக்கடல் எனலாம். இவ்விரு கடல்களும் சங்கமிக்கும் வகையில், சங்கப்பாடல்களின் கவிதை உணர்வையும், உளவியல் கருத்தையும் (ஏற்புடைய வகையில்) இணைத்துக் காணும் பாங்கில், சங்க இலக்கியங்களில் ஒன்றான அகநானூற்றின் மருதத்திணையில் தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தினை உளவியல் அடிப்படையில் ஆராயவுள்ளது இக்கட்டுரை.

ஒவ்வொருவருக்கும் அவரவர் வாழ்க்கையில் ஏற்படும் ஏமாற்றங்கள், தோல்விகள், போராட்டங்கள் அவர்களின் உள்ளத்தைப் பாதிக்கின்றன. அதனோடு உள்ளத்தின் நடுநிலை அமைதியையும் குலைக்கின்றன. இந்நிலையில் உள்ளம் தன்னைத்தானே பாதுகாக்கச் சில முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். எத்தகைய இடர்ப்பாடுகள் நேரிடினும் அத்தகைய சூழ்நிலைகளில் உள்ளத்தின் வீழ்ச்சியை உள்ளத்தின் போக்கே தடுத்து நிறுத்த வேண்டும் அல்லது பிறரின் அறிவுரையை ஏற்றுத் தன் வாழ்க்கையைச்